அனுப்புநர்

உறுப்பினர்-செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எண்.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.

பெறுநர்

ஆணையாளர்,
வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்,
அம்பத்தூர்,
சென்னை-600 053.

---

கடித எண்.பி3/27473/2005 நாள்: 20.03.2007

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – திட்ட அனுமதி – நில அளவை எண்கள் 97/1எ, 1பி, 1சி மற்றும் 97/1டி, நொளம்பூர், அம்பத்தூர் கிராமம், முகப்பேர், நொளம்பூர், அம்பத்தூர், சென்னையில் அடித்தளம் வாகன நிறுத்தம் + 4 தளங்கள் கொண்ட இரண்டு தொகுப்பு கட்டிடங்களில் 60 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப்பிரிவு எண்.1132, நாள் 11.11.05 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. இதே எண். கொண்ட இவ்வலுவலகத்தின் 02.01.06 மற்றும் 25.05.06 நாள் கடிதங்கள்.
3. ந.க.எண்.1929/06/03, நாள் 23.06.06 ஆணையாளர், வில்லிவாக்கம் ஒன்றியத்திடமிருந்து பெறப்பட்ட கடிதம்.
4. க.எண்.9828/2000, நாள் 05.09.2006 செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து பெறப்பட்ட கடிதம்.
5. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள் 28.09.2006.
6. விண்ணப்பதாரரின் 01.11.06 நாளிட்ட கடிதத்துடன் வருவாய் துறையிடமிருந்து பெறப்பட்ட உத்தேச இடத்தின் சாலை அகலம் குறித்த கிடைக்கப்பெற்ற புலப்படம்.
7. இதே எண். கொண்ட இவ்வலுவலகத்தின் கடித நாள் 22.12.2006.
8. விண்ணப்பதாரரின் திருத்திய வரைபடம் கிடைக்கப் பெற்ற நாள் 28.12.2006.
9. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள் 05.02.2007 மற்றும் 06.03.2007.
10. விண்ணப்பதாரரிடமிருந்து திறந்தவெளி படம் மற்றும் தானபத்திரம் கிடைக்கப்பெற்ற நாள் 06.02.07.
11. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித 10.02.07 நாளிட்ட கடிதம் சார் பதிவாளர், கொன்னூர் அலுவலகம் தானபத்திரம் பதிவு செய்வது சம்பந்தமாக அனுப்பிய கடிதம்.
12. விண்ணப்பதாரரின் பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் கிடைக்கப்பெற்ற நாள் 16.02.2007.
13. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள் 20.03.2007 செ.பெ.வ.கு.நிர்வாக அதிகாரி மற்றும் செயற்பொறியாளர், கட்டுமானப்பிரிவு-2, செ.பெ.வ.குழுமம், சென்னை.
14. செயற்பொறியாளரின் கடித எண்.டிவிஷன்-2/டிபி/ஓ.எல்.ஆர்.940/07, நாள் 01.03.2007.
15. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள் 6.03.07.
16. விண்ணப்பதாரரிடமிருந்து வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணம் செலுத்தியதற்கான ரசீது கிடைக்கப் பெற்ற நாள் 12.03.2007.

...

நில அளவை எண்கள் 97/1எ, 1பி, 1சி மற்றும் 97/1டி, நொளம்பூர் கிராமம், முகப்பேர், நொளம்பூர் அம்பத்தூர், சென்னையில் வாகன நிறுத்தும் தளம் +4 தளங்கள் கொண்ட இரண்டு தொகுப்பு கட்டிடங்களில் 60 குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்தைக் கட்டுவதற்கு பார்வை 1-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வை 15 இல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு

த.பி.பா.

ஒப்பளிக்கப்படுகிறது. மனுதாரர் வளர்ச்சிக்கட்டுப்பாடு விதிகளின்படி திறந்தவெளிக்கான ஒதுக்கீட்டினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒப்படைத்துள்ளார்.

2. விண்ணப்பதாரர் பார்வை 16-இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு ரசீது எண்.சி.18364, நாள் 02.03.2007 இல் கீழ் கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | |
|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | : ரூ. 99,000/- |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | : ரூ. 4,050/- |
| வரன்முறைக் கட்டணம் | : ரூ.1,10,000/- |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | : ரூ.4,04,000/- |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | : ரூ. 10,000/- |
| மொத்தம் | ரூ.6,27,050/- |

2. அ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கட்டணத்திற்காக மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ.5,15,700/- (ரூபாய் ஐந்து லட்சத்து பதினைந்து ஆயிரத்து எழுநூறு மட்டும்)க்கான வரைவோலையை விண்ணப்பதாரர் தனது 12.03.2006 நாள் கடிதத்தில் கொடுத்துள்ளார்.

ஆ) கழிவு நீரகற்று அமைப்பை பொறுத்தவரை சென்னைக் குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாக சமர்ப்பித்து உரிய அனுமதியை பெற்ற பின்தான் வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வசதிகளுக்கான வடிவமைப்புகளுக்கு உரிய அனுமதியை சென்னைக் குடிநீர் வாரியத்திடமிருந்து பெறப்பட்டு இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்புக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மீறியதாகவும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணானதாகவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. திறந்த கிணறுகள், மேல் நிலைத்தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள் சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7. எஸ்.பி/சிறப்புக் கட்டிடப்பிரிவு/107ஏ முதல் சி வரை/2007, நாள் 20.03.2007 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள்/வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 20.03.2007 இருந்து 19.03.2010 வரை செல்லபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியான அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் பஞ்சாயத்து ஒன்றியம் அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

த.பி.பா.

9. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப் பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும் படியும், இவ்வாறில்லாமல் ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப் பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

ஏ.அ. கோவிந்தராஜன்
20/3/07

உறுப்பினர்-செயலருக்காக.

20.3.2007

இணைப்பு: 1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்
இரண்டு படிகள்.
2. திட்ட அனுமதியின் இரண்டு படிகள்.

நகல்: 1. ஐஸ்வர்யா லட்சுமி ப்ராபர்டிஸ் (பி) லிமிடெட்,
திரு டி.எஸ். மதுசூதனன் மற்றும் 3 நபர்கள்.
19, கோவிந்தன் தெரு,
அய்யாவு காலனி,
அமைந்தகரை, சென்னை-600 029.

2. உறுப்பினர்,
உரியதுறை (Appropriate Authority),
108, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

3. வருமானவரி ஆணையர்,
168, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

4. துணைத்திட்ட அமைப்பாளர்,
செயலாக்கப்பிரிவு (தெற்கு),
செ.பெ.வ.குழுமம்,
சென்னை-600 008.

கா.ச.20/3